17 JUN 2010
செப்பாக்கம், சென்னை-5

சுருக்கம்

உறுதியாக்கம் – ஈரோடு மாநகராட்சி – திரு.த.விஜயகுமார், திருமதி. எம். சண்முக வடிவு மற்றும் வி.ட்டி.அசோக்குமார் ஆகியோர்கள் – உதவி செயற் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கி பணி நியமனம் செய்யப்பட்டமைக்கு அரசு உறுதியாக்கம் அளித்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந.6) துறை

அரசாணை ( பத்தாண்டு ) எண்.304

நாள் 14–6–2010
திருவள்ளுவராண்டு 2041
வைகாசி மாதம், 31–ம் நாள்

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26–09–1996.
2. அரசாணை (நிலை) எண்.206 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22–10–2008.
3. ஈரோடு மாநகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.சி1/9628/2009 நாள் 31–8–2009.
4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண். 43113/.2009/எப்.4/ நாள் 15–12–2009 மற்றும் 3–5–2010.

-------

ஆணை:

நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது 15–12–2009–ம் நாளிட்ட கடிதத்தில் ஈரோடு நகராட்சி 1–1–2008 முதல் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டது என்றும், அப்போது அம்மாநகராட்சிக்கு இதரப் பணியிடங்களுடன் மூன்று உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்டது என்றும், ஈரோடு மாநகராட்சியில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்பட்ட உதவி பொறியாளர்/இளநிலைப் பொறியாளர்களுக்கான பணிமூப்பு பட்டியலில் முதுநிலையில் உள்ள திரு.த.விஜயகுமார், திருமதி எம்.சண்முகவடிவு மற்றும் திரு.வி.ட்டி.அசோக்குமார் ஆகிய உதவிப் பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெறத் தகுதி பெற்றுள்ளதன் அடிப்படையில் ஈரோடு மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.1612 நாள் 31–08–2009–ல் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும், ஈரோடு மாநகராட்சி ஆணையர் வெளியிட்டுள்ள உதவிப் பொறியாளர் பணிமூப்புப் பட்டியலில் முதுநிலை வரிசை எண்.1 மற்றும் 4ல் முறையே உள்ள திரு.து.குரவிச்சந்திரன்

மற்றும் S.சோமசுந்தரம் ஆகியோர் மீதான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் தகுதி இன்மையின் காரணமாக அவர்கள் இருவர் நீங்கலாக ஏனைய மூவரையும் ஈரோடு மாநகராட்சி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.சி1/9628/2009 நாள் 18-9-2009ல் உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு செய்யப்பட்டு பணி புரிந்து வருகிறார்கள் என்றும், ஈரோடு மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர் தொடர்ந்து, தமிழ்நாடு மாநகராட்சிப் பணி விதிகள் 1996ல் உள்ள வழிமுறைகளின் படி, மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளின் படி வகுப்பு II பணியிடமான உதவி செயற் பொறியாளர் பணியிடத்தினை பதவி உயர்வின் மூலம் மட்டுமே பூர்த்தி செய்யலாம் எனவும், ஈரோடு மாநகராட்சி புதிதாக நிலை உயர்த்தப்பட்ட மாநகராட்சியாகையால் பணி விதிகளில் குறிப்பிட்டுள்ள பணி அனுபவத்திற்கான காலவரை பொருந்தாது (Experience period prescribed for promotion need not be considered) எனவும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர் தொடர்ந்து, மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளில், உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் பணியிடங்கள் 3:1 என்ற விகிதாச்சாரத்தில் நிரப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அரசு ஆணை எண். (நிலை) 237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26-9-96, இணைப்பு 1, பொது அறிவுரைகள் வரிசை எண்.8-பி (1)ல் கூறியுள்ளபடி 3:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் 3 உதவிப் பொறியாளர் (A.E) பணியிடத்திலிருந்தும் 1 பணியிடம் இளநிலைப் பொறியாளர் (J.E) பணியிடத்திலிருந்தும் நிரப்பப்பட வேண்டும் என்றுள்ளது. என்றும், ஆனால் அரசாணை எண்.197 (பத்தாண்டு) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20-5-2009 பத்தி 2 (அ)ல் திருவிட்டி.அசோக்குமார் அவர்கள் ஈரோடு மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் பணியிடத்தில் பணிமூப்பு பட்டியலில் கடைசியாக இடம்பெறுவார் என்றுள்ளது என்றும், எனவே திரு விட்டி.அசோக்குமார் அவர்களை திருமதி எம்.சண்முகவடிவு, உதவிப் பொறியாளருக்கு கீழ் பணிமூப்பு செய்து உதவிச் செயற்பொறியாளர் பணியிடத்தில் வரிசை எண்.2ல் உறுதியாக்கம் செய்யவும், இவருடைய முதுநிலை உதவிப்பொறியாளர் பணியிடத்தில் திருமதி எம்.சண்முகவடிவு, உதவிப் பொறியாளருக்கு கீழே நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

4) அதனடிப்படையில், ஈரோடு மாநகராட்சி ஆணையரால், உதவி பொறியாளர் பணியிடத்திற்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட தேர்ந்த பெயர்ப்பட்டியலினை கீழ்கண்டுள்ளவாறு மறு சீரமைத்து புதிய முதுநிலைப் பட்டியல் வெளியிடவும், இதன்

அடிப்படையில் உதவிச் செயற் பொறியாளர் (A.E.E) பணியிடத்தில் கீழ்க்கண்டுள்ளவாறு உறுதியாக்கம் செய்யவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசினை வேண்டியுள்ளார்.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | உதவி பொறியாளர் பணி மூப்பு பட்டியலில் வரிசை எண் | உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு செய்யப்பட்ட ஈரோடு மாநகராட்சி ஆணையர் செயல்முறை ஆணை எண்(ம) நாள் | உதவி செயற்பொறி யாளராக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி எம்.சண்முக வடிவு, உதவி செயற்பொறியாளர் | 3 | சி1/9628/2009 நாள் 18-9-2009 | 18-9-2009 முற்பகல் |
| 2 | திரு விட்டி.அசோக்குமார், உதவி செயற்பொறியாளர் | 5 | சி1/9628/2009 நாள் 18-9-2009 | 18-9-2009 முற்பகல் |
| 3 | திரு த.விஜயகுமார், உதவி செயற்பொறியாளர் | 2 | சி1/9628/2009 நாள் 18-9-2009 | 18-9-2009 முற்பகல் |

5) நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலித்தது. நகராட்சிகளில் பணிபுரிந்து வந்த இளநிலைப் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்களின் முதுநிலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, இறுதி செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரின் 19-12-2006 நாளிட்ட குறிப்பாணை ந.க.எண்.72362/2002/F2ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, பொதுவான மற்றும் ஒருங்கிணைந்த (Common and combined single seniority list) ஒரே முதுநிலைப்பட்டியல் தான் நடைமுறையில் இருக்க வேண்டும். தமிழ்நாடு மாநகராட்சி பொறியாளர் மற்றும் குடிநீர் வழங்கல் பணிவிதிகள் 1996ன் படி மேற்கூறிய விதிமுறைகள் 1-10-96 முதல் சென்னை நீங்கலாக அனைத்து மாநகராட்சிகளிலும் நடைமுறையில் உள்ளது.

6. மேலும், 19.12.2006-ம் நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் குறிப்பாணை எண்.ந.க.எண்.72362/2002/F2 வில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு நகராட்சிப் பொறியாளர் பணியமைப்பில், உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கான

முதுநிலைப்பட்டியலில் 3:1 என்ற விகிதமுறை கடைப்பிடிக்கப்பட்டு திரு.த.விஜயக்குமார் 10-12-98ல் இளநிலைப் பொறியாளராக நியமனம் செய்யப்பட்டு, பணிமூப்பு வரிசை எண்.142ல் வைக்கப்பட்டுள்ளார். பின்னர், 1999-ம் ஆண்டு நேரடி நியமனம் மூலம் உதவிப் பொறியாளராக நியமனம் செய்யப்பட்ட திருமதி எம்.சண்முகவடிவு, அம்முதுநிலைப்பட்டியலில் வரிசை எண்.183-ல் தான் இடம் பிடித்துள்ளார். திருத.விஜயகுமாரின் முதுநிலைப்பட்டியல் இறுதி செய்யும் போது திருமதி எம்சண்முகவடிவு உதவிப் பொறியாளர் பணியில் இல்லை. 1999ம் ஆண்டு பணியில் சேர்ந்த திருமதி எம்.சண்முகவடிவு, ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டியலில் தன்னுடைய வரிசை எண்.183ல் முறையாக வைக்கப்பட்டுள்ளார்.

7) தமிழ்நாடு மாநகராட்சிப் பொதுப்பணிவிதிகள் விதி 36-ன்படியும் மற்றும் ஈரோடு மாநகராட்சி சட்டம் விதி 7(3)ன் படியும், மாநகராட்சிப் பணிவிதிகள் இல்லாதவற்றுக்கு அரசு ஆணைகள் மற்றும் இதர விதிகள் பொருந்தும் என்றும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின்படி வெளியிடப்பட்ட விதிகள், ஆணைகள், சிறப்பு அறிவிக்கைகள் மூலம் ரத்து செய்யப்படாதவரையில் ஈரோடு மாநகராட்சிக்கும் பொருந்தும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பொறியாளர் பட்டம் பெற்ற திரு த.விஜயகுமார், இளநிலைப் பொறியாளர், அரசாணை (நிலை) எண்.221 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27-8-1992ன்படி உதவிப் பொறியாளராக பதவி மாற்றம் செய்தது சரியானது என்று கருதப்படுகிறது. தற்போதும் இளநிலை பொறியாளர் எவரேனும் பி.இ.பட்டம் பெற்றால், உதவிப் பொறியாளராக பதவி மாற்றம் பெறவும், (Redesignation) அந்த பதவிக்கான சம்பளம் நிர்ணயம் செய்யவும் முடியும். ஆனால் அவருடைய பணிமூப்பில் மாற்றம் செய்ய இயலாது.

As per the provisions under the Tamil Nadu Municipal Corporations Engineering and Water Supply Service Rules 1996 the ratio of 3:1 will be adopted only at the Entry level appointment of Assistant Engineer & Junior Engineer respectively. However, the Junior Engineer on acquiring his/her BE Degree Qualification can be Redesignated as Assistant Engineer from the day following the last day of the sitting of the Examination as under Fundamental Rules, but his/her seniority will not be changed and continued in the same berth in the combined seniority of Assistant Engineer/Junior Engineer. The promotion to the post of Assistant Executive Engineer will be considered only as per the combined seniority not by separate seniority between Assistant Engineer/Junior Engineer.

8) கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு 106 (2) (b) ன் படி உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு அனைத்து தகுதிகளும் பெற்றுள்ள திரு.த.விஜயகுமார், திருமதி.எம்.சண்முகவடிவு மற்றும் திரு.வி.டி.அசோக்குமார் ஆகியோர்களுக்கு

கீழ்க்கண்டவாறு மாமன்ற ஒப்புதலுடன் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | பெயர் | தற்போது வகிக்கும் பதவி | பதவி உயர்வு நியமனம் |
|---|---|---|---|
| 1 | திரு த.விஜயகுமார் | உதவிப்பொறியாளர் | உதவி செயற்பொறியாளர் 18-9-2009 முதல் |
| 2 | திருமதி.எம்.சண்முகவடிவு | உதவிப்பொறியாளர் | உதவி செயற்பொறியாளர் 18-9-2009 முதல் |
| 3 | திரு விட்டி.அசோக்குமார் | உதவிப்பொறியாளர் | உதவி செயற்பொறியாளர் 18-9-2009 முதல் |

9) ஈரோடு மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து, கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு 106 (2) (b) ன் படி கீழ்க்கண்ட நியமனங்களுக்கு உறுதியாக்கம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.



| வ. எண் | பெயர் | தற்போது வகிக்கும் பதவி | பதவி உயர்வு நியமனம் |
|---|---|---|---|
| 1 | திரு த.விஜயகுமார் | உதவிப்பொறியாளர் | உதவி செயற்பொறியாளர் 18-9-2009 முதல் |
| 2 | திருமதி.எம்.சண்முகவடிவு | உதவிப்பொறியாளர் | உதவி செயற்பொறியாளர் 18-9-2009 முதல் |
| 3 | திரு விட்டி.அசோக்குமார் | உதவிப்பொறியாளர் | உதவி செயற்பொறியாளர் 18-9-2009 முதல் |



(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-600 005.
ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, குறளகம், சென்னை -600 108
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
முதன்மைச்செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-600 00 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை-600 009.
இ.கோ/உ.நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

15-6-2010.
பிரிவு அலுவலர்.